**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.73** **நாள்: 03.06.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 01.06.2019 தேதி முதல் பதிவு செய்யப்படுகின்ற பெயர் சேர்ப்பு மற்றும் திருத்தம் செய்யப்படுகின்ற அனைத்து பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களும் சம்பந்தப்பட்ட பிறப்பு இறப்பு பதிவாளரின் e-signature செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் என ஆணையாளர் / சிறப்பு அலுவலர் திரு.கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1930ம் வருடம் முதல் நடப்பு தேதி வரையில் நிகழும் அனைத்து பிறப்பு மற்றும் இறப்புகளும் கணினிமயமாக்கப்பட்டு, 2007 வருடம் முதல் இணையத்தளத்திலிருந்து பொதுமக்கள் இலவசமாக பதிவிறக்க செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படுகின்ற சான்றிதழ்களில் மாநகர சுகாதார அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட பிறப்பு இறப்பு பதிவாளர் அவர்களின் facsimile கையொப்பத்துடன் காணப்படும்.

தற்பொழுது, பெருநகர சென்னை மாநகராட்சியில் 01.06.2019 தேதி முதல் பதிவு செய்யப்படுகின்ற / பெயர் சேர்ப்பு மற்றும் திருத்தம் செய்யப்படுகின்ற அனைத்து பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களும் சம்பந்தப்பட்ட பிறப்பு இறப்பு பதிவாளரின் E-signature செய்யப்பட்டு, www.chennaicorporation.gov.in என்ற இணையத்தளத்திலிருந்து பொதுமக்கள் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளும் நடைமுறை ஏற்படுத்தப்படவுள்ளது என ஆணையாளர் / சிறப்பு அலுவலர் திரு.கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**